பக்கங்கள்:-18

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 19 | ஞாயிற்றுக்கிழமை | 03.09.2023 | அதிர்வு 33

## சு.கவுக்குள் எவ்வித குழப்பமும் இல்லை

**இப்படிக் கூறுகின்றார் மைத்திரி**



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று அக்கட்சியின் தலைவரான 03

# பிரபா துதிபாடுவோரை சிறையில் அடையுங்கள்



### வீரசேகர, வீரவன்ஸ, கம்மன்பில கூட்டாக வலியுறுத்துகின்றனர்

கொழும்பு, செப்ரெம்பர் 03

“விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைத் துதிபாடுவோரை அரசு உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்.” 02

# வடக்கு, கிழக்கில் விகாரைகள் ஏன் நிர்மாணிக்கக் கூடாது?

### எந்தச் சட்டத்தில் அப்படி இருக்கிறது என அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க கேள்வி



“இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள் உள்ளன. அவர்கள் அங்கு சென்று சுதந்திரமாக வழிபடுகின்றார்கள். இந்நிலையில், 25 மாவட்டங்களிலும் சிங்களவர்களுக்காகப் பௌத்த விகாரைகள் இருப்பதில் என்ன பிரச்சினை? வடக்கு – கிழக்கில் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கக்கூடாது 03

# திருமலையில் விகாரைக்கு எதிரான இன்றைய போராட்டத்துக்குத் தடை!

திருகோணமலை, இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பொரலுகந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் இன்றைய போராட்டத்தில் ஈடுபடுவதற்கு 14 பேருக்குத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 03

### போராட்டக்காரர்களை மகிழ்விக்க

## ஜனாதிபதி மாளிகையில் பியானோ இசைத்த பொலிஸ் அதிகாரி ‘அவுட்’

இலங்கையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் புரட்சியைத் தொடர்ந்து, ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றிய பின்னர், எதிர்ப்பாளர்களைப் பியானோ இசைத்து மகிழ்வித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்தித்த எதிர்ப்பாளர்களால், ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப்பட்ட நாளில் பாதுகாப்புக்காகப் பொலிஸ் கான்ஸ்டபிள் தயாரத்ன நியமிக்கப்பட்டிருந்தார். 03

## இரகசியம் பரகசியம்



‘முள்ளை முள்ளால் எடுப்பது’ என்பார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பதவியில் நீடிக்க விடாமல் இந்தப் பதவிக் காலத்தோடு வீட்டுக்கு அனுப்புவதற்கு, ரணில் முன்மாதிரியாகக் காட்டிய அரசியல் தந்திரோபாயத்தையே பயன்படுத்த 02

# டலஸ் அணியினரின் முயற்சி பிசுபிசுப்பு கூட்டணியில் இணைய ஜே.வி.பி. மறுப்பு



எதிரணிகளை ஒன்றிணைத்து பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்காக டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபை விடுத்துள்ள அழைப்பை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. நிராகரித்துள்ளதென நம்பகரமான அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆட்சியில் இருந்து வெளியேறி நாடாளுமன்றத்தில் தற்போது சுயாதீனமாகச் செயற்படும் டலஸ் அணியில் 13 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இந்நிலையில் எதிரணிகளை ஒன்றிணைக்கும் முயற்சியில் அந்த அணி ஈடுபட்டு வருகின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியுடனும் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜே.வி.பியினரைச் சந்தித்து டலஸ் அணியினர் பேச்சு நடத்தியுள்ளனர். இதன்போது கூட்டணி பற்றி பேசப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தாலும், எதிரணி கூட்டணியில் ஜே.வி.பியையும் இணைத்துக்கொள்வதே டலஸ் தரப்பின் திட்டமாக இருந்ததுள்ளது. அதனை இலக்காகக்கொண்டே டலஸ் அணி பேச்சுக்குச் சென்றிருந்தது. எனினும், அம்முயற்சி கைகூடவில்லை.

டலஸ் அணியுடன் தேர்தல் கூட்டணிக்கு இடமில்லை எனவும், தேர்தல் போன்ற விடயங்களை வென்றெடுப்பதற்கு பொது இணக்கப்பாட்டுடன் செயற்படலாம் எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

மக்களுடன்தான் எமது அணி கூட்டணி அமைக்கும் எனவும் ஜே.வி.பி. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என வலியுறுத்தி எதிரணியில் சில தரப்புகள் அவ்விடயத்தில் களத்தில் குதித்திருக்கின்றன.

அது, அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கு இலக்கு வைத்து மும்முரமாக உழைத்து வரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவுக்கு ஆப்படிக்கும் விவகாரமாக மாறி இருக்கின்றது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றியீட்டி, தென்னிலங்கை அரசியலில் உச்சச் செல்வாக்கோடு இருந்த மஹிந்த ராஜபக்ஷவை அதிகாரத்திலிருந்து வீட்டுக்கு அனுப்புவதற்காக ஜனாதிபதி தேர்தலில் பிரதான கட்சி வேட்பாளர் என்ற தமக்கான வாய்ப்பை இரண்டு தடவைகள் துறந்து, தியாகம் பண்ணியவர் ரணில் விக்கிரமசிங்க.

ஒரு தடவை சரத் பொன்சேகாவுக்கு. அடுத்த தடவை மைத்திரிபால சிறிசேனவுக்கு. அவர் தாமாக விலகி விட்டுக் கொடுத்தார். அவரது அந்தத் தாராளம் ஒரு வகையில் தியாகம். முதல் தடவை அவரின் தியாக முயற்சி தோற்றதாயினும், இரண்டாவது தடவை பயன் தந்தது. ஜனாதிபதிப் பதவியில் இருந்து மஹிந்தர் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்.

இரண்டு தடவைகள் தமது வேட்பாளர் வாய்ப்பைத் தாமாக விட்டுக் கொடுத்த ரணிலிடமிருந்து அடுத்த தடவை – மூன்றாம் முறை – உள்கட்சிக்குள் தர்பார் நடத்தி சஜித் பிரேமதாஸா தட்டி பறித்தார். ஆனால் தோற்றுப் போனார்.

2010 தேர்தலிலும், 2015 தேர்தலிலும் எதிரணியின் பொது வேட்பாளர் வெல்வதற்காகத் தாமாக விலகி விட்டுக் கொடுத்து, பொது வேட்பாளருக்கு இடம் அளித்து, அவருக்காக முழு அளவில் சூறாவளிப் பிரச்சாரமும் செய்தவர் ரணில்.

ஆனால், 2019 தேர்தலில் அந்த வேட்பாளர் பதவி கட்சிக்குள் கலகம் செய்த சஜித்தினால் தட்டிப் பறிக்கப்பட்ட போதும், கட்சித் தலைவராக அந்தத் தேர்தல் சமயத்தில் சஜித்துக்காகப் பிரச்சாரம் செய்தவர் ரணில்.

ஆனால் சஜித் தரப்பினால் வேட்பாளர் வாய்ப்பு அவரிடம் இருந்து பிடுங்கப்பட்டாலும், விதி 2022 ஜூலையில் அதே ஜனாதிபதிப் பதவியை அவரது மடியில் தேடி வந்து பொத்து என்று போட்டது.

இப்போது சர்வ வல்லமை உடையவராக மாறியிருக்கும் ரணிலை வீட்டுக்கு அனுப்புவதற்கு, முன்பு மஹிந்தருக்கு எதிராகப் பொது வேட்பாளரை ரணில் நிறுத்தியமை போல இம்முறை ரணிலுக்கு எதிராகப் பொது வேட்பாளரை தெரிவு செய்து, அத்தகையவரை நிறுத்துவதற்கு சஜித் தாம் விலகி, விட்டுக் கொடுத்து, இடமளிக்க முன் வர வேண்டும், அப்போதைய ரணிலைப் போல இப்போது சஜித்தும் தமது வேட்பாளர் வாய்ப்பை தியாகம் செய்ய வேண்டும் என எதிரணியில் நிற்கும் பல பிரமுகர்கள் தங்களுக்குள் கூடிப் பேசி வருகின்றனர். சஜித்தின் கட்சியிலும் ஒரு சாரார் இவ்வாறு வலியுறுத்துகின்றனர் என்று உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் 'அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி!' என்ற வீரப்பாவின் வசனம் போல அடைந்தால் ஜனாதிபதி பதவி என்று முழுமூச்சாக – ஒரேடியாக – நிற்கும் சஜித்தை, மேற்படி தரப்பினரின் கருத்து எரிச்சலுக்குட்படுத்தி இருப்பதாகக் கூறப்படுகின்றது. அதனால்தான் 'எதிரணியுடன் கூட்டணி அமைத்தாலும், பொது வேட்பாளர் என்றாலும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஒரே வேட்பாளர் சஜித் பிரேமதாஸாதான்!' என்று தன் தரப்பைக் கொண்டு முற்கூட்டியே மீண்டும் மீண்டும் கூற வைக்கின்றார் சஜித்.

எது, எப்படியோ எதிரணி – எதிரிகள் – பிரிந்து நின்றால் ரணிலுக்குக் கொண்டாட்டம்தானே...!

ஜனாதிபதிப் பதவி மீதான சஜித்தின் வெறி பொது வேட்பாளர் என்ற இணக்கத்துக்கு விட்டுக் கொடுக்க அவரை இடமளிக்காது, அதுவரையில் பொது வேட்பாளர் திட்டம் பலிக்காது, தமது வெற்றி உறுதி என்ற மிதப்பில் இருக்கிறார் ரணில்.

சரியோ, பிழையோ 2010லும், 2015 ஜனாதிபதி வேட்பாளர் நிலையைப் பொது வேட்பாளர் ஒருவரை தேர்வதற்காக ரணில் விக்கிரமசிங்க விட்டுக் கொடுத்தமை அரசியலில் ஒரு பெரிய தியாகம்தான்.

ஆனால், வயதிருந்தும் அத்தகைய விட்டுக் கொடுப்புக்கு கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் வரப் போகின்ற ஜனாதிபதி தேர்தலிலும் இடம் அளிக்காத சஜித் அதன் காரணமாகப் பதவி வெறி பிடித்தவராகவே கருதப்படுவார்.

## பிரபா துதிபாடுபோரை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு சிங்களக் கடும்போக்குவாத நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

"இந்த நாட்டில் பயங்கரவாதத்தை விதைத்து – சொத்துக்களை நாசப்படுத்தி – மூவின மக்களையும் பிளவுபடுத்திய ஓர் அமைப்பின் தலைவரைத்தான் வடக்கு – கிழக்கில் உள்ள ஒரு தரப்பினரும், புலம்பெயர் தமிழ் மக்களும் தேசியத் தலைவராகப் புகழ்ந்து வருகின்றனர்.

தேர்தல் காலங்களில் தமிழ் அரசியல்வாதிகள் தங்களுக்கு வாக்குப் பிச்சை கேட்கப் பிரபாகரனைப் பகிரங்கமாகத் துதிபாடி வருவது வழமை.

இந்நிலையில், மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் அல்லது பிரதமராக வர வேண்டும் என்ற கனவில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் தற்போது பிரபாகரனைத் துதிபாடியுள்ளார்.

பிரபாகரன் உருவாகப் பௌத்த பிக்குகளோ அல்லது சிங்கள அரசியல்வாதிகளோ அல்லது சிங்கள மக்களோ காரணம் அல்லர் என்பதை மைத்திரிபால புரிந்துகொள்ள வேண்டும்.

பிரபாகரனிடம் இருந்த பயங்கரவாதக் குணத்தாலும், அவரிடம் இருந்த இனவெறியாலுமே அவர் அரச படைகளுக்கு எதிராக – சிங்களவர்களுக்கு எதிராக – ஆயுதம் தூக்கினார். நாட்டில் இரத்த ஆறு ஓடச் செய்யவிட்ட அவர், இறுதியில் முள்ளிவாய்க்காலில் எமது படையினரின் தாக்குதலில் மரணத்தைத் தழுவினார்.

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டை நாசமாக்கிய புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனை இனிமேல் யாரும் துதிபாடினால் அவர்களை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்."

– என்றனர்.

## சு.கவுக்குள் எவ்வித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு நாளை (இன்று) நடைபெறுகின்றது. இதன்போது பதவி நிலையில் எவ்வித மாற்றமும் வராது. அது தொடர்பில் கட்சியின் நிறைவேற்றுக்குழுதான் தீர்மானம் எடுக்கும்.

கட்சிக்குள் குழப்பம் எதுவும் இல்லை. ஒற்றுமையாகவே இருக்கின்றோம். பிளவு என்பது உருவாக்கப்பட்ட கதையாகும். அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை எதிரியும் இல்லை." – என்றார்.

## வடக்கு, கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று எந்தச் சட்டத்தில் உள்ளது."

– இவ்வாறு கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.

"திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசத்தில் 10 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் 238 சிங்களவர்களுக்கு 23 பௌத்த விகாரைகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன. 10 சிங்களவர்களின் வழிபாட்டுக்காகத் தலா ஒரு விகாரை வீதம் அமைக்கப்படவுள்ளது. குச்சவெளி பகுதியில் இந்தப் புதியவிகாரைகளைஅமைக்கும்திட்டத்துக்கான அனுமதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது" – என்று கடந்த வாரம் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம் நேற்று வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகள் இருக்கக்கூடாது – புதிதாக நிர்மாணிக்கப்படக் கூடாது என்று யார் சொன்னது? அப்படியாயின் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்களா? வடக்கு – கிழக்கில் மாத்திரம் தமிழர்களுக்கு இந்து ஆலயங்கள் அமைக்கப்படவில்லை. நாட்டின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள் உள்ளன. சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் இந்து ஆலயங்கள் பெருமளவில் உள்ளன. உதாரணத்துக்குக் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் எத்தனை இந்து ஆலயங்கள் உள்ளன? அங்கு மூலைமுடுக்கெல்லாம் பெரிய, சிறிய இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராகச் சிங்கள பௌத்தர்கள் போர்க்கொடி தூக்கினார்களா? பல இடங்களில் இந்து ஆலயங்களுக்குச் சென்று சிங்கள பௌத்தர்கள் கூட வழிபடுகின்றார்கள்.

எனவே, தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகங்களும் இனவாதத்தை – மதவாதத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்த வேண்டும்.

இன்று நாட்டு மக்களுக்கிடையில் இனவாத, மதவாதப் பிரச்சினைகள் இல்லை. தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகங்களும்தான் இப்படியான பிரச்சினைகளைத் தூண்டி விடுகின்றன." – என்றார்.

# 400 வகையான மருந்துகள் அவசரமாகக் கொள்வனவு



400 வகையான மருந்துகள் அவசர கொள்வனவு நடைமுறையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு, வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 378 வகையான மருந்துகளும் வைத்தியசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், வைத்தியசாலைகளில் 77 வகையான மருந்துகள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அனுமதியற்ற மீன்பிடி வலைகளை பயன்படுத்திய ஏழு மீனவர்கள் கைது

அனுமதியற்ற மீன்பிடி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றச்சாட்டில் 21 முதல் 38 வயதிற்கு உட்பட்ட 07 பேரை 2 டிங்கி படகுகளுடன் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் – வெற்றிலைக்கேணி கடற்படைக்குட்பட்ட சுண்டிக்குளம் கடற்படையினர் இவர்களைக் கைது செய்துள்ளனர் என கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் கட்டைக்காடு முள்ளியானை சேர்ந்தவர்கள் என்றும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல் வளத்திணைக்கள அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனவும் கடற்படை தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்போது ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் இருந்த பியானோவில் அமர்ந்து, அதன் அறைகள் வழியாக சென்றுகொண்டிருந்த மக்களுக்கு அவர் பாடலை இசைத்திருந்தார்.

"கட்டடத்தைச் சேதப்படுத்தும் போது தயாரத்ன பியானோ வாசித்துக் கொண்டிருந்தார்" என்று பெயர் வெளியிடாத ஒரு மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

நீண்ட விசாரணைக்குப் பின்னர் கான்ஸ்டபிள் ஒழுக்கத்தை மீறியுள்ளார் என்று பொலிஸ் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருகோணமலையில் தமிழர் குடியிருப்புக்களின் மத்தியில் அமைக்கப்படவுள்ள விகாரைக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தடை விதித்தமையைத் தொடர்ந்து, பிக்குகள் காட்டுத்தனமாகச் செயற்பட்டு, திருகோணமலை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்குள் புகுந்து குழப்பம் விளைவித்திருந்தனர்.

விகாரை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள அரச காணிக்குள் பிக்குகள் நுழைய பிரதேச செயலாளர் தடை விதித்திருந்தார். பிக்குகள் குழப்பம் விளைவித்ததைத் தொடர்ந்து, அந்தத் தடையுத்தரவு விலக்கப்பட்டிருந்தது.

இதையடுத்துப் பெரியவெளி சந்தியில் இன்று போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இன்று நடக்கவுள்ள நிலையில், அதற்கு எதிராக விகாராதிபதி தரப்பினரும் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளனர் எனவும், இது இன முறுகலை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டி நிலாவெளி பொலிஸார் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் இரு தரப்பிலும் தலா 7 பேர் வீதம் 14 பேருக்குத் தடையுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் உட்பட போராட்டத் தரப்பினர் 7 பேருக்கும், விகாராதிபதி உள்ளிட்ட விகாரைக்கு ஆதரவானவர்கள் 7 பேருக்கும் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.






# நல்லூரான் 13 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழாவின் 13ஆம்நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி,தெய்வானை பசு வாகனத்திலும், முருகப்பெருமான் காராம் பசு வாகனத்தில் வீதியுலாவந்தனர்.

படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழர் தரப்பின் பரப்புரை

இலங்கையில் தேசிய ரீதியில் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சித் தேர்தலுக்கு நாடளாவிய அளவில் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரும் தேர்தல் - வாக்களிப்பு - நடக்கவில்லை. வேட்பு மனுக்கள் ஏற்று ஆறு மாதங்கள் கடந்து விட்டன. இன்னும் அந்த வேட்புமனுக்களும் தேர்தலும் உத்தியோபூர்வமாக ரத்துச் செய்யப்படவில்லை. யார் அதைச் செய்வது என்பதிலும் சட்டச் சிக்கல். இழுபறி. எனினும் அந்த வேட்புமனுக்கள் காலாவதியாகும் என்பது பெரும்பாலும் உறுதி.

மாகாண சபை தேர்தலும் இப்போதைக்கு நடக்கும் சாத்தியமே இல்லை.

ஜனாதிபதி ரணில் எதிர்பார்ப்பது போல - விரும்புவது போல - அடுத்த ஆண்டில் வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில்தான் இனி இங்கு வாக்களிப்பு. ஆனாலும் அந்தத் தேர்தலும் இங்கு இன்னும் சூடு பிடிக்கவில்லை.

ஆயினும், நமது அயல் நாடான இந்தியாவில் தற்போதைய நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இன்னும் 8 மாதங்களில் முடிவடைய இருக்கையில், அங்கு தேர்தல் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி நேரத்துடன் தேர்தலுக்குப் போகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கட்சி பெரிய விவகாரமாக்கிய அயோத்தி ராமஜென்ம பூமியில் ராமர் கோயில் கட்டுமானப் பணி முடிவடைந்து, அடுத்த ஜனவரியில் - தைப்பொங்கலை ஒட்டி - அது திறந்து வைக்கப்பட இருக்கின்றது. அந்த ஆரம்பப் பூஜையில் பிரதமராக கலந்த கொண்ட கையோடு, தேர்தல் வாக்களிப்பை எதிர்கொள்ள பிரதமர் மோடி விரும்புகிறார் என்று கூறப்படுகிறது.

ஆகவே, இந்தியாவில் விரைவில் தேர்தல் என்பது உறுதி. அதையொட்டி இங்கு நமது தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது கவனத்திற்குரியது.

இந்திய விடயத்தை இங்குள்ள இந்தியத் தூதரகம், தூதுவர் மற்றும் புதுடில்லியில் இருந்து வரும் அரசுத் தலைவர்கள் ஆகிய தரப்புகள் மட்டத்தில் மட்டுமே ஊடாடிக் கையாள்வது என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் 'புளித்துப் போன' அணுகுமுறையைத் தூக்கி எறிந்து, கைவிட்டு விட்டு, வெளியே வந்து தமிழ்த் தலைவர்கள் இனி செயற்படுவது காலத்தின் கட்டாயம்.

இந்தியத் தேர்தலில் சம்பந்தப்பட்ட இரு பிரதான தரப்புகளினதும் - பாரதீய ஜனதா தலைமையிலான ஆளும் கூட்டணி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான எதிரணிகளின் 'இண்டியா' கூட்டணி இரண்டினதும் தலைவர்களைத் தேடிச் சென்று சந்தித்து, இலங்கைத் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு நின்று, நிலைத்து, நீடிக்க கூடிய, நீதியான தீர்வைக் காண்பதற்கான உறுதிப்பாட்டை அவரவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உயர்ந்தபட்சத்தில் வலிமையாக இடம்பெறச் செய்ய வைக்க வேண்டும்.

இதற்கான புத்திசாதுரியமான அணுகுமுறைத் திட்டத்தை தமிழ்த் தலைவர்கள் முன்னெடுக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உத்தியோகபூர்வப் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஏற்கனவே தமிழகத்தில் இத்தகைய முயற்சியை ஆரம்பித்திருக்கிறார் என்று தகவல். ஏனைய தமிழ் தலைவர்களும் அந்த முன்மாதிரியைப் பின்பற்றி காய் நகர்த்தலை - Lobbying (பரப்புரை ஏற்பாடுகளை) ஆரம்பிப்பது அவசியம்.

# வாயில் இரத்தத்துடன் இறந்து கிடந்த யானை

## தம்புத்தேகமவில் சம்பவம்



தம்புத்தேகம, கெமுனுபுர பிரதேசத்தில் கடந்த புதன் கிழமை காட்டு யானையொன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

அதன் இறப்புக்கான காரணத்தை அறிய வனவிலங்கு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். ஆரம்ப விசாரணையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் அல்லது மின்சார வேலியில் இருந்து மின்சாரம் தாக்கியதற்கான அறிகுறி எதுவுமோ கண்டுபிடிக்கப்படவில்லை. யானை வாயில் இரத்தத்துடன் இறந்து கிடந்தது.

தம்புத்தேமக பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்கின்றனர்.வனவிலங்கு அதிகாரிகள் அதற்கு உதவி வருகின்றனர்.

# கல்வியங்காட்டில் பழ வியாபாரி ஒருவர் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம் கல்வியங்காடு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் 23 வயதுடைய வியாபாரி, கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையில் வியாபாரி கடத்தப்பட்டதாக கோப்பாய் பொலிஸில் முன்வைத்த முறைப்பாட்டில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இன்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து வாகனம் ஒன்றில் வருகை தந்த 12 பேர் கொண்ட கும்பல், பழ வியாபாரியை தாக்கிவிட்டு அவரை கடத்திச் சென்றதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஏற்றுமதி வருமானம் 10 வீதத்தால் வீழ்ச்சி

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களுக்குள் ஏற்றுமதி வருமானமானம் 10.3 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

689 கோடி 10 லட்சம் அமெரிக்க டொலராக ஏற்றுமதி வருமானம் பதிவாகியுள்ளது.

பெட்ரோலிய உற்பத்திகள் சார்ந்து ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பெட்ரோலிய உற்பத்திகள் சார்ந்த ஏற்றுமதி வருமானம் 24.5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

# தென்னை முக்கோண வலயம் வடக்கில் அங்குரார்ப்பண விழா












வடக்கு தென்னை முக்கோண வலயத்தை உருவாக்குவதன் அங்குரார்ப்பண நிகழ்வும், சர்வதேச தென்னை விழாவும், தென்னை வளர்ப்பாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று சனிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மாதிரித் தென்னை தோட்டம் பகுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் ராமேஷ் பத்திரன, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லொஹான் ரத்வத்த, நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், தெங்கு அபிவிருத்தி சபை அதிகாரிகள், தென்னை உற்பத்தியாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தென்னை செய்கையாளர்களுக்கு ஓர் ஏக்கர் தென்னைச் செய்கைக்கான தென்னைங்கன்றுகளும், உள்ளீடுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பேசிய அமைச்சர் ரமேஷ் பத்திரன –

இன்று முதல் இரண்டு வருடங்களில் 35 லட்சம் தென்னைகளை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் வடமாகாணத்தில் மக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும் எனத் தாம் நம்புகிறார் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தென்னை செய்கையில் சிறப்பாக மேற்கொண்ட செய்கையாளர்களுக்கு நினைவுப் பரிசில்களும், சிறந்த தென்னைச் செய்கையாளர்களுக்கு ரூபா இரண்டு லட்சம் காசோலைகளும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து அந்நிகழ்வின் நினைவாக அமைச்சரினால் தென்ங்கன்றும் நாட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# உலகின் சிறந்த மத்திய வங்கி ஆளுநர்கள் 21 பேரில் ஒருவரானார் நந்தலால் வீரசிங்க



உலகின் மிகச்சிறந்த மத்திய வங்கி ஆளுநர்கள் 21 பேரில் ஒருவராக, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

குளோபல் பினான்ஸ் (Global Finance) சஞ்சிகையினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு முதல் குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் மேற்கொள்ளப்படும் இந்த சர்வதேச தரப்படுத்தலில் 101 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பணவீக்க கட்டுப்பாடு, பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்தல், நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வட்டி வீத முகாமைத்துவம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, ஏ முதல் எவ் வரையிலான மட்டங்களில் இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.

இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஏ மட்டத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்ததரப்படுத்தலின்போது, இலங்கையுடன் கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, ஐஸ்லாந்து, இந்தோனேஷியா, மொராக்கோ மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் முன்னணியில் காணப்படுகின்றன.

இந்தத் தரப்படுத்தலில் இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் ஷக்திகாந்தா தாஸும் முதலிடத்தில் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# லண்டனில் நடந்த கவனவீர்ப்புப் போராட்டம்




சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி, இலங்கையில் காணமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கு நீதி கோரி இலண்டனில் கவனவீர்ப்புப் போராட்டம் கடந்த 31 ஆம் திகதி நடைபெற்றது. புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகளின் சொந்தங்கள் மற்றும் புலம்பெயர் தமிழ் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# ஊடகர் பிரகாஷ் நினைவாக நேற்று இரத்த தான முகாம்








மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதில் பெரும் எண்ணிக்கையானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினார்கள்.

பிரகாஷினுடைய நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று காலை 8.30 மணி முதல் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஷ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (ஆரளஉரடயச னுலளவசழகூழல) நோயினால் பாதிக்கப்பட்டமையால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது.

அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலை கல்வியை இடைநிறுத்திக்கொண்டார்.

அந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடக துறையில் தனக்கொன்று ஓர் இடத்தைத் தக்க வைத்திருந்தவர்.

சுயாதீன ஊடகவியலாளராக யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார்.அந்நிலையில் கடந்த 2021 செப்டம்பர் 2ம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார்.

# தமிழரசு மன்னார் மாவட்ட கிளை நிர்வாகிகள் தெரிவு





இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளைக்குப் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று நடைபெற்றது.

கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் தலைமையில் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேசக் கிளைகளினதும் நிர்வாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனும், செயலாளராக சூசைப்பப்பு துரமும், பொருளாளராக முன்னாள் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் பரஞ்சோதியும், துணைத் தலைவராக மாந்தை மேற்கு முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஜெயக்குமாரும், துணைச் செயலாளராக செல்வராணி சோசையும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அதேவேளை, மாவட்டக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

# தும்பிக்கை மின் வேலியில் சிக்குண்டதால் ஆனமடுவவில் கொம்பன் யானை உயிரிழப்பு



புத்தளம் – ஆனமடுவ செம்புவெவ பகுதியில் கொம்பன் யானையொன்று உயிரிழந்த நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் யானை உயிரிழந்திருப்பதைக் கண்ட அப்பிரதேச மக்கள் புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

இதனையடுத்து,அந்தப் பகுதிக்கு வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் சென்று உயிரிழந்த கொம்பன் யானையைப் பார்வையிட்டுள்ளனர்.

தும்பிக்கை மின்சார வேலியில் சிக்குண்டதாலேயே கொம்பன் யானை உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த கொம்பன் யானை 9 அடி உயரம் அதன் தந்தம் 2 அரை அடி நீளம் எனவும் 40 வயது மதிக்கத்தக்கது எனவும் அந்தத் திணைக்களத்தினர் மேலும் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த கொம்பன் யானையில் மிருக வைத்தியர் இசுருவினால் இன்று உடற்கூற்று பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்த யானை மரணித்தமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வனஜீவராசிகள் திணைக்களக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# புதிய விநியோக நிறுவனம் செயற்பட ஆரம்பித்து 24 மணி நேரத்தில் எரிபொருள் விலை அதிகரிப்பு

## இது ஊழல் 'டீல்' என்கிறார் மிஹிந்தலை விகாராதிபதி



புதிய எரிபொருள் விநியோக நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என மிஹிந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி கலாநிதி வலவாஹெங்குனுவெவ தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் –

பல்வேறு நாடுகளில் இருந்து வருகைத் தந்து எமது மக்களுக்கு நிவாரண ரீதியில் எரிபொருள் விநியோகிப்பார்கள் என ஆரம்பத்தில் கூறியிருந்தனர். நிவாரணம் வழங்குவதாக கூறி எரிபொருள் நிறுவனத்தை ஆரம்பித்தனர். ஆரம்பித்த 24 மணி நேரத்திற்குள் மீண்டும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களை அரசியல்வாதிகள் உள்ளனர் என்பதனை நாட்டு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதேநேரம் நிறுவனங்களுடன் இரகசிய "டீல்" வைத்த பின்னர் அவர்கள் இங்கு தமது செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர். தேவையான அளவில் விலையை அதிகரித்து தருகின்றோம், நீங்கள் விரும்பிய விலைக்கு விற்பனை செய்து அதில் எமக்குப் பாதியை வழங்குங்கள் என்றே அவர்கள் கூறியுள்ளனர்.

அந்தச் சூட்சுமத்தை 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் புரிந்து கொண்டுள்ளோம். நாட்டு மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள். இது ஊழல் மிகு டீல் ஆகும்.

பல்வேறு நிறுவனங்களின் பெயர்கள் இருந்தாலும் சில நிறுவனங்கள் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் நண்பர்களின் மற்றும் உறவினர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவர்களுக்கு பணம் எங்கிருந்து கிடைக்கின்றது? இவை அனைத்தும் கறுப்புப் பணம். மக்களுக்கு என்ன நடந்தாலும் அவர்கள் கவலையடைவதில்லை. அவர்களுக்கு பணம் கிடைத்தால் போதும் . – எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையின் சிவப்புப் பிடியாணைகளுக்கான கோரிக்கைகளை ஏற்க 'இண்டர்போல்' மறுப்பு

## இங்கு மரண தண்டனை விதிக்கப்படுவதே காரணம்






சர்வதேச பொலிஸார் ("இண்டர்போல்") தற்போது குற்றவாளிகளுக்கு சிவப்புப் பிடியாணைகளை வழங்க மறுத்து வருகின்றனர் எனக் குற்றவியல் மற்றும் சட்டப் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கும் கொலைகளுக்கும் இலங்கையில் மரண தண்டனை வழங்கப்படுவதே இதற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுப் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவை திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் முன் அழைக்கப்பட்ட போது இந்த விடயம் தெரியவந்துள்ளது.

### 148 சிவப்பு பிடியாணை

இந்த குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த குற்றம் மற்றும் சட்டப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசங்க கரவிட்ட –

"பாதாள உலகத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர்களின் பட்டியலை நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். அவர்களின் படங்கள், வசிக்கும் இடங்கள் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

தற்போது வெளிநாட்டில் இருப்பவர்களிடம் இருந்து 148 சிவப்பு பிடியாணைகளை பெற்றுள்ளோம். அவர்களில் சிலரை இலங்கைக்கு அழைத்து வர வாய்ப்பு கிடைத்தது.12 பேர் இந்தியாவில் சிறையில் உள்ளனர்.

பாதாளக்குழுக்கள் முழுமையாக வெளிநாட்டில் இருந்து கட்டுப்படுத்தப் பட்டுள்ளன. பணத்திற்காகக் கொலை செய்யும் குழுவையும் நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம்.

அவர்களுக்கு உதவுவோர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர் . கடந்த காலங்களில் மோதல்கள் மற்றும் மரணங்கள் தொடர்பான பல வழக்குகள் உள்ளன. இது தொடர்பான கோப்புகள் அனைத்தும் சட்டமா அதிபரிடம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

சர்வதேச பொலிஸார் நிராகரிப்பு

எனினும் சிலரின் செயற்பட்டால் அதிகாரிகள் பின்னடைவை சந்தித்துள்ளனர். அவ்வாறான கொலைகளை நியாயப்படுத்த வேண்டும் என முயற்சிக்கின்றனர்.

ஒருவரைக் கைது செய்யப் போகும் போது, அவர் சட்டவிரோதமான வழிகளில் வெளிநாடு செல்வது இப்போது எங்களுக்குப் பிரச்சினையாகி விட்டது.

சமீபத்தில், ஹந்தயா என்ற நபர் குற்றம் நடந்த இரு நாட்களுக்குள் துபாய்க்கு சென்றுள்ளார்.

இவ்வாறான குற்றவாளிகள் தொடர்பில் நாங்கள் சர்வதேச பொலிஸாரிடம் சிவப்புப் பிடியாணை கேட்டால், அவர்கள் அதனை மறுக்கின்றனர்.

ஒரு சந்தேக நபரை உங்கள் நாட்டிற்கு மரண தண்டனையை நிறைவேற்ற நாங்கள் ஒருபோதும் கொண்டு வந்து ஒப்படைக்க மாட்டோம் என அழுத்தமாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதேபோல், நாங்கள் கோரிய 05 சிவப்பு அறிவிப்புகளை அவர்கள் நிராகரித்துள்ளனர்." – எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை கூட்டுக் குழுவின் மூலம் தீர்வு எட்டப்படும்

## மத்திய இணை அமைச்சர் எல். முருகன் உறுதி

– என.புவியரசன் –

தமிழகம் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தை ஆய்வு செய்த மத்திய மீன்பிடி அமைச்சர் இலங்கை கடற்படையின் பிரச்சினைக்குக் கூட்டுக் குழு மூலம் தீர்வு ஏற்படுத்தப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் மீன்பிடி துறைமுகங்கள் அமைப்பதற்கு இந்தியப் பணத்தில் 1800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. "ஏர் ஆம்புலன்ஸ்" சேவை, தேசிய அடையாள அட்டை வழங்குவது ஆகியன குறித்தும் பரிசீலனை செய்யப்படும் என மத்திய இணை அமைச்சர் தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் புதிதாக மீன்பிடி துறைமுகங்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதனை மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பர்ஷாத்தம் ரூபாலா மற்றும் மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர்.

பின்னர் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் செய்தியாளர்களை சந்தித்த போது தெரிவித்தவை வருமாறு:–

தமிழகத்தில் மீன்பிடித் துறைமுகங்கள் அமைப்பதற்கு 1800 கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகளுக்கு இலங்கை – இந்திய கூட்டுக்குழு அமைத்து தீர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது அந்தக் குழு இரு நாட்டு அதிகாரிகள் மட்டத்தில் மட்டும் பேச்சுகள் நடத்தியுள்ளது. இன்னும் அமைச்சர்கள் மட்டத்தில் பேச்சு நடத்தவில்லை. அந்தப் பேச்சுகளை முன்னெடுத்து உரிய தீர்வு ஏற்படுத்திக் கொடுக்க முயற்சிக்கப்படும்.

மீனவர்களுக்கு தேசிய அடையாள அட்டை வழங்கல் மற்றும் ஏர் ஆம்புலன்ஸ் சேவையை அமைத்துக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும்.


இலங்கைப் பிரச்சினை விடயத்தின் அடிப்படையான கச்சதீவை யார் இலங்கைக்குத் தாரை வார்த்துக் கொடுத்தனர் எனப்பேசி அதனை அரசியலாக்க விரும்பவில்லை. – எனத் தெரிவித்தார்.

# ‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ ஆய்வுக் குழு உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிப்பு

முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான ஒரே நாடு ஒரே தேர்தல் ஆய்வுக்குழுவின் உறுப்பினர்களின் பெயர்களை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மத்திய சட்ட அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து ஆராய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழுவின் உறுப்பினர்களாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, காங்கிரஸ் கட்சியின் மக்களவைத் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, மாநிலங்களவை முன்னாள் தலைவர் குலாம் நபி ஆசாத், 15 ஆவது நிதிக் குழுவின் தலைவர் என். கே. சிங், மக்களவை முன்னாள் பொதுச் செயலாளர் சுபாஷ் காஷ்யப், மூத்த வழக்கறிஞர் ஹரிஷ் சால்வே, மத்திய ஊழல் தடுப்புப் பிரிவின் முன்னாள் தலைவர் சஞ்சய் கோத்தாரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவின் கூட்டங்களில் சிறப்பு அழைப்பாளராக மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பங்கேற்பார்.



இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின் கீழ் தற்போதுள்ள கட்டமைப்பைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்ற மக்களவை, மாநில சட்டமன்றங்கள், நகராட்சிகள் மற்றும் பஞ்சாயத்துகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான பரிந்துரைகளை இந்தக் குழு ஆய்வு செய்து பரிந்துரை செய்யும்.

அரசியலமைப்பு, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 மற்றும் இவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் ஆகியவற்றில் தேவைப்படும் திருத்தங்களை ஆய்வு செய்து அது குறித்து இக்குழு பரிந்துரைக்கும். ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதே இதன் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘ஒரே நாடு ஒரே தேர்தல்’ திட்டம் தொடர்பான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் மத்திய அரசு குழு அமைத்துள்ளதற்கு காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. அ.தி.மு.க, தமாகா ஆகிய கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் சில ஆண்டு கால இடைவெளியில் தேர்தல் நடைபெறுகிறது. மாறி மாறி தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்படுவதால் வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படுகின்றன.

இந்த நிலையில், மக்களவைக்கும், மாநில சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடியும், பா.ஜ.க. தலைவர்களும் வலியுறுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விஜயலட்சுமி புகாரில் உண்மை இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என்கிறார் சீமான்





நடிகை விஜயலட்சுமி தனக்கு முன்வைத்துள்ள புகாரில் உண்மை இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது சீமான் மேலும் தெரிவிக்கையில், நடிகை விஜயலட்சுமி கடந்த 11ஆண்டுகளாக ஒரே குற்றச்சாட்டைக் கூறி வருகிறார்.

ஏற்கனவே 6 பேர் மீதும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். இதை ஊடகங்களும் ரசிக்கின்றன. அவசியமற்றக் கேள்விகளைத் தவிர்க்க வேண்டும். அவதூறுக்கு அஞ்சுபவன் அற்ப வெற்றியைக்கூட தொடமுடியாது.

எந்த ஆட்சியாக இருந் தாலும், புகாரில் உண்மைத் தன்மை இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

அத்துடன், ஒரே நாடு, ஒரே தேர்தல் அவசியமற்றது. தேர்தலுக்குப் பணம் கொடுப்பதை நிறுத்துங்கள். நாட்டின் தேர்தல் செலவு குறையும். உடை, உணவு, பண்பாடு எனநிறைய வேறுபாடு இருக்கும்போது, ஒரே நாடு, ஒரே தேர்தல் எப்படி சாத்தியப்படும்?

காவிரியில் முதலில் தண்ணீர் வரட்டும். கச்சத்தீவு, முல்லை பெரியாறு என பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன.

காவிரியில் தண்ணீர்விடக் கோரி, தமிழ கத்தில் பா.ஜ.க. போராடுமா? மகாராஷ்டிர மாநிலத்தில் 5 ஆயிரம் கோடி ரூபா செலவு செய்து, சட்டப்பேரவை உறுப்பினர்களை விலை கொடுத்து பா.ஜ.க. வாங்கியது. இது ஊழல் இல்லையா? பா.ஜ.கவின் ஊழல்களை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம் என்று தெரிவித்துள்ளார்.

# ரஜினிகாந்துடன் ஓ.பன்னீர்செல்வம் திடீர் சந்திப்பு!



முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் நடிகர் ரஜினிகாந்தை அவரது போயஸ்கார்டன் இல்லத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார். இது தொடர்பான புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமான சந்திப்பு என கூறப்படுகிறது. மேலும் ஓ.பன்னீர்செல்வம் இன்று காஞ்சிபுரத்திலிருந்து தமிழகம் முழுவதும் தனது சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள உள்ள நிலையில் நேற்று ரஜினிகாந்தை சந்தித்துள்ளார்.

இதேவேளை, நடிகர் ரஜினிகாந்த் ‘ஜெயிலர்’ திரைப்பட வெற்றிக்கொண்டாட்டத்தில் மகிழ்ந்துள்ளார். இந்த திரைப்படம் உலகம் முழுவதும் 600 கோடி ரூபா வசூலிலை பெற்றுள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.

# உக்ரைனில் போரில் முடங்கிய பாடசாலைகள் மீண்டும் திறப்பு!



உக்ரைனில் ஏற்பட்ட போர் காரணமாக முடங்கிய பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி முதல், கிழக்கு உக்ரைனுக்குள் நுழைந்து, ரஷ்ய படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு, உக்ரைன் இராணுவத்தினரும் எதிர் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

ஆரம்பத்தில் போரில் உக்ரைன் சற்று பின் தங்கியிருந்தாலும் அமெரிக்கா மற்றும் இதர நாடுகளின் உதவியுடன் தற்போது வரை எதிர்கொண்டு வருகிறது.

போரின் காரணமாக, உக்ரைனில் பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தது. மாணவர்கள் தங்களின் கல்வியை இணையவழி மூலமாக தங்கள் வீட்டியில் இருந்தே கற்று வந்தனர்.

இந்த நிலையில், தங்கள் மாணவர்களின் புதிய கல்வி ஆண்டைத் ஆரம்பித்துள்ளனர் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சமூகவலை தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் அந்த பதிவில் மேலும் குறிப்பிடுகையில்,

போர் இருந்தபோதிலும், உக்ரைனில் பாடசாலை மாணவர்கள் மீண்டும் புதிய கல்வி ஆண்டைத் ஆரம்பித்துள்ளனர். வெற்றிகரமான ஆண்டுக்கு அவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்.

நாடு முழுவதும் பாதுகாப்பை மீட்டெடுக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம். நேர்மையாகவும், உறுதியாகவும் இருப்பவர்களுக்கும், மற்றவர்களின் உதவியைப் பெறுபவர்களுக்கும் மிகப்பெரிய கனவுகள் கூட நனவாகும் என குறிப்பிட்டுள்ளார்.

## பிரித்தானியாவில் 150 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன!





பிரித்தானியாவில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படும் 150 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் ஆபத்தான கொங்கிரீட் கட்டடத்தில் இயங்குகின்றன எனவும் அவை இடிந்து விழும் நிலையில் காணப்படுவதாலேயே குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. பிரித்தானியாவில் உள்ள பெரும்பாலான பாடசாலைகள் ஆபத்தான கொங்கிரீட் கட்டடத்தில் இயங்குகின்றன என தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பாடசாலை கட்டடம் இடிந்து விழுந்து மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

இந்த நிலையில், பாடசாலைக் கட்டடங்கள் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி 150 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

## ஈராக்கில் பேருந்து விபத்து: 18 பேர் பலி!



ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், குறித்த விபத்தில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு சிறிய ரக பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 14 ஈரானியர்களும், 2 ஆப்கானிஸ்தான் பிரஜைகளும் அடங்குவதாகவும் ஏனைய இருவரின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் கர்பலாவில் இடம்பெறவிருந்த மத நிகழ்வொன்றுக்காக பயணித்தவர்களே விபத்துக்குள்ளாகியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# றவூப் ஹக்கீம் அம்பாறைக்கு விஜயம்



(கே. எ. ஹமீட்)

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீம் நேற்று (01) அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்தார். இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர்பைஷால்காசிம், எச்.எம்.எ.ஹறிஸ், எம்.எஸ்.தௌபிக், கிழக்கு மாகாண முன்னாள்ஆளுநர்எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை ஆகியோர் கலந்து கொண்டனர்.



# மீண்டும் கியூ யுகம் வரும் செந்திவேல் எச்சரிக்கை

நாட்டில் மீண்டும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டு வரிசை (கியூ) யுகம் தோன்றும் அபாயம் காணப்படுவதாக புதிய ஜனநாயக மார்க்ஸிச லெனிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த ஆட்சியாளர்கள் மக்களிடம் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் சர்வதேச நாணய நிதிய உதவி கிடைத்தவுடன் நாங்கள் இலங்கையை சொர்க்கமாக்குவோம் எனக் கூறியிருந்தனர்.

உண்மையில் அதுவல்ல பிரச்சினை. 2.9 பில்லியன் அமெரிக்க டொலரின் ஒரு பகுதியைத்தான் சர்வதேச நாணய நிதியம் வழங்கியிருந்தது.

முழுக் கடனையும் அடைப்பதற்கு அவர்கள் உதவி வழங்கி இருக்கவில்லை. இவர்கள் தொடர்ந்தும் கடன் வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

வேறு வேறு நாடுகள், வேறு வேறு அமைப்புகள் ஊடாகக் கடன் வாங்குகின்றார்கள்தவிர, கடனை மீளச்செலுத்துபவர்களாக இல்லை. தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைதான் உள்நாட்டு கடனை மறுசீரமைக்கின்றோம் என்பது.

இந்த வேலைக்கு ஊழியர் சேமலாப நிதியம் போன்ற மிகப்பெரிய நிதி இருக்கின்ற இடத்தில் கை வைத்துள்ளார்கள். அதுவும் எடுக்கப்பட்டால் இந்த மக்களுக்கு எதுவுமே மிச்சம் இல்லை.

இந்த ஆட்சியாளர்கள் ஒரு கடனை அடைப்பதற்கு மேலும் பல கடன்களை பெறுகின்றார்கள்.

இந்த ஆட்சியாளர்கள் வாங்குகின்ற வேலையைத்தான் செய்கின்றார்கள்.

நாட்டினுடைய உற்பத்தியை அதிகரிப்பதே இந்த நெருக்கடியிலிருந்து மீள ஒரே வழி. மக்கள் இணைந்து உற்பத்தியைப் பெருக்கினால் மட்டுமே



இவர்கள் இந்த கடனில் இருந்து மீள முடியும் என்பது நிதர்சனம்.

இதன் மூலம்தான் தேசிய பொருளாதாரத்தை படிப்படியாகக் கட்டியமைக்க முடியும்.

எதிர்வரும் காலத்தில் நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட உள்ளது. அண்மையில் பங்களாதேஷிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடனின் ஒரு பகுதி மீள வழங்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

நிச்சயமாக நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட சாத்தியம் உள்ளது. வரிசை ஏற்படும் அபாயம் தற்பொழுது தலைதூக்க வழி கோலப்படுகின்றது. – என்றார்.

# இலக்கிய நாடகப் போட்டியில் கோரக்கர் பாடசாலை முதலிடம்



(வி.ரி. சகாதேவராஜா)

அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டியில் கிழக்கு மாகாண மட்ட போட்டிக்கு சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயம் தெரிவாகியுள்ளது.

கல்முனை கல்வி மாவட்ட மட்ட தமிழ்த் தினப் போட்டி வியாழக்கிழமை (31) சம்மாந்துறை அல்-மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

அங்கு இடம் பெற்ற இலக்கிய நாடக திறந்த போட்டியில் முதலாம் இடம் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு கோரக்கர் தமிழ் மகாவித்தியாலய பாடசாலை மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

இந்த புறநானூறு இலக்கிய நாடகத்தை நெறியாள்கை செய்த நாடகம் அரங்கியல் பாட ஆசிரியர் கிளிப்டன் செலர் மற்றும் இதில் பங்கு பற்றிய மாணவச் செல்வங்களுக்கும் பாடசாலை அதிபர் சோ.இளங்கோபன் மன மார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

வரலாற்றில் முதல் தடவையாக மாகாண மட்டத்துக்கு இப் பாடசாலை இலக்கிய நாடகப் போட்டியில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விதை நூல் வெளியீடு





கவிஞர் மு.அனுஷன் எழுதிய சிறகிருந்தால்...! என்னும் கவிதை நூல் வெளியீடு கடந்த ஞாயிற்றுக் கிழமை மஸ்கெலியா புளூம்பீல்ட் தேசிய கல்லூரியில் பழைய மாண வர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் அதிபர் து.அறிவழகன் தலைமையில் நடைபெற்றது.

# தகவல் தொடர்பு செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்துடன் இணைந்து தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் தொடர்பு திறன் சம்மந்தமான செயலமர்வு ஒன்றை மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்தின் கல்முனை அலுவலகத்தில் வியாழக் கிழமை (31) நடத்தின.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மெற்றோ பொலிட்டன் கல்வி நிறுவனத்தின் ஸ்தாபக தலைவர் கல்முனை மாநகர முன்னாள் முதல்வர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்துகொண்டார்.

கல்வி நிறுவனத்தின் முகாமையாளர் எஸ். முஹம்மட் சப்னாஸ், கல்வி நிறுவனத்தில் கடமையாற்றும் உதவி முகாமையாளர்கள் மற்றும் மனித மேம்பாட்டு அமைப்பின் பொது முகாமையாளர் டப்லியூ. ஷவ்தப் உசைம் உற்பட உயர்பீட உறுப்பினர்கள் என பலர் பங்கேற்றனர்.

இந்தச் செயலமர்வில் வளவாளராக கல்வி நிறுவனத்தின் விரிவுரையாளர்களாக கடமையாற்றும் எ. எம். எம். தாரிக், எஸ். சரிஸ்ஸா, அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# போசணை உணவுகள் தாய்மாருக்கு அறிமுகம்



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தால் போசணை மிக்க உணவுகளை தயாரித்து அதனைத் தாய்மார்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வு வியாழக்கிழமை (31) சாய்ந்த மருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரி யப்பர் தலைமையில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஐ. எல். எம். றிபாஸ் பிரதம அதிதி யாக கலந்து கொண்ட இந்நிகழ்வில் குறித்த அலுவலகத்தின் பொது சுகாதார மாதுக்களும் ஏனைய சுகாதார உத்தி யோகத்தர்களும் இணைந்து சமகால பொருளாதார முகாமைத்துவத்துக்கு ஏற்ற உணவு தயாரிப்பில் ஈடுபட்டனர். தாய்மாருக்கு அது தொடர்பான விழிப் புணர்வையும் வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதி பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ. அப்துல் வாஜித், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என். எம். இப்ஹாம், பொது சுகாதார மாதுக்கள் மற்றும் பொது சுகாதார பரிசோதர்களும் கலந்துகொண்டனர்.



# பயிற்சியில் பெற்ற விடயங்களை அலுவலகங்களில் செயற்படுத்த வேண்டும்



## மாகாணப் பணிப்பாளர் தெய்வேந்திரன் தெரிவிப்பு

(அபு அலா )

அலுவலகப் பணியாளர்கள் தங்க ளின் அறிவுத்திறன்களையும் விருத்தி செய்கின்ற அதேவேளை, இன்றைய பயிற்சியில் பெற்ற விடயங்களை தங்க ளின் அலுவலகங்களில் அமுல்படுத்தி செயற்பட வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் நாம் பெற்ற பயிற்சியில் பிரதிபலன்களைக் கண்டுகொள்ளலாம் என்று கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபி விருத்திப் பிரிவின் மாகாணப் பணிப் பாளர் ஏ.ஜீ.தெய்வேந்திரன் கேட்டுக் கொண்டார்.

கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண பொதுச் சேவையி லுள்ள அலுவலகப் பணியாளர்களுக் கான ஒருநாள் பயிற்சி நெறி மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவின் திருகோணமலை காரியாலய கூட்ட மண்டபத்தில் வியாழக்கிழமை (31) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சி அபிவிருத்திப் பிரிவின் மாகா ணப் பணிப்பாளர் ஏ.ஜீ.தெய்வேந் திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த ஒருநாள் பயிற்சி நெறிக்கு மட்டக் களப்பு மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் ஏ.நவேஸ்வரன் வளவாளராக கலந்துகொண்டார்.

இதன்போது, அரச பணியாளர்க ளின் கடமைப் பெறுப்புக்கள், கடமைகள், செயற்பாடுகள், நடத்தைகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிய பயிற்சி கள் நடத்தப்பட்டன. அவர்களுக்குள் செய்முறை பயிற்சியும், அறிமுகப் பயிற்சியும் வழங்கி வைக்கப்பட்டன.

இப்பயிற்சிநெறியில்மாகாணஅமைச் சுக்கள், மாகாண திணைக்களங்கள், நிறுவனங்கள் போன்ற பல அரச அலு வலகங்களில் கடமையாற்றும் அலு வலகப் பணியாளர்களுக்கு இப்பயிற்சி நடத்தப்பட்டன. பங்குபற்றியவர்களுக் கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# யாழ்ப்பாணத்தில் கைத்தொழில் கண்காட்சி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண மக்களின் கைத்தொழில் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கு இலங்கையின் பல பாகங்களிலும் சந்தை வாய்ப்புகளை உருவாக்கி உற்பத்தியாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பவற்றின் ஏற்பாட்டில் யாழ். கலாசார மண்டபத்தில் கைத்தொழில் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

முதல்நாள் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் அமைச்சர் ரமேஸ் பத்திரண, கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜா உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையிலுள்ள 20 தொழில் நிறுவனங்களின் 300 இற்கும் மேற்பட்ட காட்சி கூடங்கள் இங்கு அமையப் பெற்றுள்ளன.

புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பம் என்பவற்றை இக் கண்காட்சியின் போது காணக்கூடியதாக உள்ளது.

# மட்டக்களப்பு ஆயித்தியமலையில் தூய சகாயமாதா பாதயாத்திரை









கனகராசா சரவணன்

மட்டக்களப்பு ஆரோக்கிய மாதா தேவலாயத்தில் இருந்து ஆயித்தியமலை தூய சகாயமாதா தேவாலயத்துக்கான பாதயாத்திரை நேற்று சனிக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. இந்தப் பாதயாத்திரையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஆயித்தியமலை தூய சகாயமாதா தேவாலய வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு வருடாவருடம் மக்கள் தமது வேண்டுதலை நிறைவேற்ற பாதை யாத்திரையாகச் செல்வர். மட்டு ஆரோக்கிய மாதா வேலாயத்தில் இருந்து மாதாவின் திரு உருவத்தை எடுத்துச் செல்வது வழமை.

இந்த வருடாந்தத் திருவிழாவை முன்னிட்டு நேற்று மட்டக்களப்பு நகரில் இருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் கொண்ட ஆயித்தியமலை பிரதேசத்திலுள்ள தூய சகாயமாதா தேவாலயத்திற்கு திரு உருவம் எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு வைக்கப்பட்டு, விசேட ஆராதனை இடம்பெற்றது.

இதில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள தேவாலய பங்கு தந்தைகள், அருட்சகோதரிகள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர்

# கொழும்பில் அறிவுத் திருக்கோயில்












இலங்கை மனவளக்கலை மன்றத்தின் கொழும்பு அறிவு திருக்கோயில் ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழா சிறப்பு நிகழ்ச்சிகள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றன.





# இன்றைய ராசி பலன்கள் - 03.09.2023




இன்று கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரலாம். நீங்கள் இதில் முழு ஆற்றலையும் செலுத்த வேண்டியிருக்கும். பொழுதுபோக்கிற்கென சிறிது நேரமே ஒதுக்க வேண்டியிருக்கும். நீங்கள் இன்று அமைதியாக இருக்கவேண்டும்.

நீங்கள் கூடுதல் பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக்கும். மேலும் நீங்கள் பணிகளை கவனமாக கையாள வேண்டியிருக்கும்.

உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் பேச்சில் கவனம் வேண்டும். உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும் வகையில் கவனமற்ற வார்த்தைகளை நீங்கள் பேச வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று நீங்கள் சௌகரியமாக உணர்வீர்கள். இனிமையான வார்த்தைகள் மூலம் நீங்கள் பலனடைவீர்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை வளரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க சாத்தியமாகலாம். நீங்கள் உங்கள் மன உறுதியால் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நேர்மையான நம்பிக்கையான உறவு கொண்டிருபீர்கள். இன்று மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும்.

இன்று நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் சொத்து அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. முக்கிய முதலீடுகளில் பங்கு கொள்வதன் மூலம் லாபம் பெறலாம்.

இன்று உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உங்களின் ஆற்றலை நீங்கள் சிறப்பாக பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் மனதில் தெளிவு காணப்படும். இதனால் உங்கள் செயல்களை திறமையாக ஆற்றுவீர்கள். பொருத்தமான செயல்களை செய்து உங்கள் நிலையை மேம்படுத்துவீர்கள். இனிமையான வார்த்தைகள் உங்களுக்கு பல நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு பதவி உயர்வு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் குடும்ப வளர்ச்சி பற்றிய ஆலோசனை நடத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். லாபம் தரும் முதலீட்டிற்கானபயனுள்ள திட்டங்களில் பங்கு கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.




இன்று பதட்டமான சூழ்நிலை காணப்படும். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் அமைதியை உணர்வீர்கள். கூடுதல் பொறுப்புகள் உங்களுக்கு கவலை அளிக்கும். இரவில் தூக்கமின்மை காணப்படும்.

நீங்கள் சிறந்த பலனைக் காண மிகக் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி பெற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இந்த அனுபவம் திருப்தி அளிக்கும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்றைய தேவைகளை பூர்த்தி செய்வது கடினமாக காணப்படும்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று அதிருப்தியான நிலை காணப்படும். அனுசரணையான போக்கு உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். சிறந்த பலன் காண உங்கள் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் எதிர்காலத்திற்காக நீங்கள் திட்டமிட வேண்டும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிக்க நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். பணியில் கவனமாக இருப்பதன் மூலம் தவறுகள் நேராமல் தவிர்க்கலாம். தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் கவனமாக பணியாற்றவும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிலவ வேண்டுமெனில் நீங்கள் உங்கள் துணையிடம் சகஜமாகப் பேச வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். பல வாய்ப்புகள் உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும். நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்றைய நாளின் பலன்கள் உங்களுக்கு திருப்தி அளிக்கும்.

நீங்கள் பொறுப்புடனும் சிரத்தையுடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள். கடினமான பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பேசுவீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும். இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சீராக இருக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.




இன்றைய நிகழ்வுகள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள். மொத்ததில் உங்கள் செயல் திறனில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதிநிலைமை உங்களுக்கு சாதகமாகவும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள போதுமானதாகவும் இருக்கும்.




இன்று செயல்கள் சீராக நடக்க சாதகமாக இருக்காது. இன்று அதிக பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. கூடுதல் பணிகள் காரணமாக திட்டமிட்டபடி பணிகளை செய்வது கடினமாக இருக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். உங்களுக்கு கூடுதல் செலவுகள் ஏற்படும். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது.

# இன்றைய ராசி பலன்கள் -03.09.2023




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழப்பீர்கள். நற்பலன்கள் காண எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். முக்கிய முடிவுகள் இன்று சிறந்த பலன் அளிக்காது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். பணிகள் சலிப்பூட்டுவதாக இருக்கும். நீங்கள் சிறந்த பணி மாற்றம் விரும்புவீர்கள். அது இன்று சாத்தியமில்லை.

கடுமையான வார்த்தைகள் மற்றும் செயல்கள் உங்கள் துணையின் மனதில் காயத்தை ஏற்படுத்தும். இதனால் உறவின் ஸ்திரத்தன்மை பாதிக்கும்.

இன்று அதிக செலவுகள் செய்ய நேரலாம். இது உங்களுக்கு கூடுதல் சுமையாக இருக்கும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. அஜாக்கிரதை மற்றும் கவனமின்மை காரணமாக உங்களுக்கு வளர்ச்சி அளிக்கும் சில மதிப்பு மிக்க வாய்ப்புகளை இழப்பீர்கள்.

பணியிடத்தில் வெற்றிகள் அதிக அளவில் காணப்படாது. இதனால் பணிகள் தேங்கிக் கிடைக்கும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கலாம்.

மனதில் உள்ள குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். அற்ப காரணங்களுக்காக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் செலவுகளை கட்டுபடுத்த இயலாது. சிக்கனம் கடைபிடிக்க வேண்டும்.




இன்று சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும். முக்கிய இலக்குகளை அடைய திட்டமிடலாம். நீங்கள் எதிர்பார்த்ததை விட இன்று அதிகம் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

பணியிடத்தில் அதிக வாய்ப்புகள் காணப்படும். நீங்கள் பணிகளை திறமையாகவும் விரைவாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் அணுகுமுறையில் உறுதி காணப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் சிறந்த அமைதியனா தருணங்களைபகிர்ந்துகொள்வீர்கள். இதனால் இன்றைய நாள் இனிமையாக சிறப்பாக இருக்கும்.

உங்களின் சேமிப்பு ஆற்றல் சிறந்த முறையில் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீடுகளில் நீங்கள் பங்கு பெறலாம்.

இன்று உங்களிடம் சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக இருக்காது. பதட்டமான சூழ்நிலை கவலை அளிக்கும். நீங்கள் சில தடைகளை சந்திப்பீர்கள். அது உங்கள் வளர்ச்சியை பாதிக்கும். சிறந்த வளர்ச்சி காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் மேலதிகாரியுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அதிகப் பணிகளால் மகிழ்ச்சி குறையும். உங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

குடும்ப பிரச்சினை சிலவற்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். கருத்துள்ள பேச்சு வார்த்தைகள் மூலம் இந்த வேறுபாட்டை சரி செய்யலாம்.

இன்று நிதிக் கட்டுப்பாடு காணப்படும். இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park